**போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

போக்குவரத்து இணைப்பு மற்றும் சொத்து முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 செப்தம்பர் 29 ஆந் திகதிய 5788-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பொது நிபந்தனையின் II, ஆ(3) மற்றும் 4.09 (ஆ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதய நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. சொத்து முகாமைத்துவத்துக்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திறனை வலுப்படுத்துதல் மற்றும் பேலியகொடவிலிருந்து புத்தளம் வரையான வீதியில் தெரிவு செய்யப்பட்ட ஜா-எல முதல் சிலாபம் நகரின் இறுதி வரையான ஏறத்தாழ 58 கிலோமீற்றர் வீதிப் பிரிவு தொடர்பாக முன்னோடி முகாமைத்துவ கோட்பாட்டிற்கான வெளியீடு மற்றும் செயலாற்றல் அடிப்படையிலான ஒப்பந்த (OPBRC) வடிவத்தை பயன்படுத்தி வடிவமைத்தல் - நிர்மாணித்தல் - பராமரித்தல் (DBM) ஒப்பந்தத்தை அமுல்ப்படுத்துதல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும்.

அபிவிருத்தி கடன் உடன்படிக்கை இல. 5788 இன் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 125 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 90.5 மில்லியன் அல்லது ரூபா 18,125 மில்லியனானதுடன் மொத்த தொகையும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் (IDA) நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. எனினும் 2018 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய 18/1682/805/051 ஆம் இலக்க அமைச்சரவை திர்மானத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் ஆரம்ப நோக்கெல்லை மாற்றியமைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆரம்ப கடன் ஒதுக்கீட்டில் ரூபா 14,500 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் செயற்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டு அனைத்து மாகாண விதிகளின் மேம்படுத்தல்களிற்காக மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுக்கள் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மீதமாகவுள்ள மீதியில், ரூபா 2,320 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 16 மில்லியன் தொகை மாத்திரம் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை தொடர்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 1,232.5 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 8.5 மில்லியன் தொகை வீதி பராமரிப்பு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் மொத்த கடன் ஒதுக்கீடு 2020 மே 06 இல் இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோலின் பிரகாரம் கொவிட் 19 பதிலளிப்பிற்கு ஐ.அ.டொலர் 7 மில்லியன் மற்றப்பட்டதன் காரணமாக ரூபா 1,305 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 9 மில்லியன் வரை மீண்டும் குறைக்கப்பட்டிருந்தது.

செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 யூன் 30 இல் ஆரம்பித்து 2018 ஆகஸ்ட் 15 இல் மீளக்கட்டமைத்து 2023 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம் | கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|
| ஒட்டுமொத்த செயற்திட்ட நடவடிக்கைகள் | 100 | 77 | செயற்திட்ட செயலாற்றலிற்கு பாதகமாக தாக்கமளித்திருந்தது. | ஆட்சேர்ப்பு அளவைப் பணிகளில் தாமதம் முன்மொழிவை சமர்ப்பிக்கும் திகதியின் நீடிப்பு |

**முகாமைத்துவத்தின் பதில்** இணங்கப்பட்டது. செயற்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் 84% ஆக உள்ளதுடன் செயற்திட்டத்தின் இறுதியில் 100% முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடியும்.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** வேலைத் திட்டத்தின் பிரகாரம் வீதி புனரமைப்பு பணிகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்டச் செயற்பாட்டின் வெளியீடு மற்றும் விளைவுகளை அளவிடுவதற்கு KPI's நிறுவப்பட்டிருக்கவில்லை. எனவே, செயற்திட்டத்தின் சாதனைகளை கணக்காய்வின் போது சரிபார்க்க முடியாதிருந்தது. | செயற்திட்டத்தின் சாதனைகளை கண்காணிப்பதற்கும் மதிப்பிடுவதற்கும் முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) நிறுவப்பட்டுள்ளன. | ”ஸ்மார்ட்” KPI's ஐ அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் சொத்து முகாமைத்துவத்துக்கான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திறனை வலுப்படுத்துதல் மற்றும் பேலியகொட - புத்தளம் வரையான வீதியில் தெரிவு செய்யப்பட்ட ஜா-எல முதல் சிலாபம் நகரின் இறுதி வரையான ஏறத்தாழ 58 கிலோமீற்றர் வீதிப் பிரிவு தொடர்பாக முன்னோடி முகாமைத்துவ கோட்பாட்டிற்கான வெளியீடு மற்றும் செயலாற்றல் அடிப்படையிலான ஒப்பந்த (OPBRC) வடிவத்தை பயன்படுத்தி வடிவமைத்தல் - நிர்மாணித்தல் - பராமரித்தல் (DBM) ஒப்பந்தத்தை அமுல்ப்படுத்துதல் செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். செயற்திட்டத்தின் செயற்பாடுகள் சொத்து முகாமைத்துவத்திற்கான நிறுவன வலுவூட்டல் மற்றும் திறன் மேம்பாடு ஆகிய 2 கூறுகளின் கீழ் செயற்படுத்தப்படுகிறதுடன் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ஐ.அ.டொலர் 125 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 90.5 மில்லியன் அல்லது ரூபா 18,125 மில்லியன் ஆகும். எனினும், 2018 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய 18/1682/805/051 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் ஆரம்ப நோக்கெல்லை மாற்றியமைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆரம்ப கடன் ஒதுக்கீட்டில் ரூபா 14,500 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியன் செயற்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டு அத் தொகை அனைத்து மாகாண விதிகளின் மேம்படுத்தல்களிற்காக மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுக்கள் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2016 யூன் 30 இல் ஆரம்பித்து 2018 ஆகஸ்ட் 15 இல் மீளக்கட்டமைத்து 2026 யூன் 30 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. செயற்திட்ட நோக்கெல்லையின் மறுசீரமைப்பின் | அரசாங்கத்தின் தேவைப்பாட்டின் காரணமாக, 2018 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய 18/1682/805/051 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்திட்டம் மறுசீரமைக்கப்பட்டது. எனவே, செயற்திட்டத்தின் நோக்கெல்லை மாற்றப்பட்டது. | விரும்பிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு ஆரம்பக் கட்டத்தில் செயற்திட்ட நோக்கெல்லையை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக கடன் தொகை 2018 ஆகஸ்ட் 15 இல் ஐ.அ.டொலர் 16 மில்லியன் வரை குறைக்கப்பட்டதுடன் அது மீண்டும் 2020 மே 06 இல் ரூபா 1,305 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 9 மில்லியன் வரை மீண்டும் திருத்தப்பட்டது.<br><br>எனவே, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழுள்ள மாகாண வீதிகளை மேம்படுத்துதல் மற்றும் தேசிய வீதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் ஆரம்ப நோக்கம் அடைந்து கொள்ளப்பட்டிருக்காததால் செயற்திட்டத்தின் நோக்கம் மாற்றப்பட்டிருந்தது. இது கணக்காய்வில் பிரச்சனைக்குரிய சிக்கலொன்றாக இருந்தது. | | |
| (இ) | எனினும், ஐ.அ.டொலர் 9 மில்லியன் திருத்தப்பட்ட கடன் வசதிகளில், 5 ஆண்டுகள் மற்றும் 3 மாதங்கள் கடந்த பின்னர் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 26 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.அ.டொலர் 2.3 மில்லியனை மாத்திரமே செயற்திட்டம் பயன்படுத்தியிருந்தது. 3 தடவைகள் செயற்திட்ட நோக்கெல்லையை மறுசீரமைத்தமை மற்றும் பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதில் உள்ள தாமதம் என்பன அந்த தாமதத்திற்கு முக்கியமாக தாக்கமளித்திருந்தன. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐ.அ.டொலர் 6.7 மில்லியன் தொகையான கடன் மீதி காணப்பட்டது. மேலும் 2023 செப்தெம்பர் 31 இல் கடன் காலாவதியாவதற்கு முன்னர் மொத்தக் கடன் வசதியைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை கணக்காய்வில் சரிபார்க்க முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. 2023 செப்தெம்பர் 30 இல் கடன் முடிவடைவதற்கு முன்னர் TCAMP இல் கிடைக்கும் கடன் வசதியைப் பயன்படுத்தலாம். | மீதமுள்ள பணிகளை விரைவுபடுத்துவதற்கு திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சொத்து முகாமைத்துவ முறைமை மூலம் 10 தொகுதிகளின் தொடர்ச்சியான தரவு சேகரிப்பு மற்றும் புதுப்பித்தல் 2023 மார்ச் 31 இன் இறுதியில் பூர்த்தி செய்யப்பட | இணங்கப்பட்டது. மீதமுள்ள காலப்பகுதியினுள் முன்னேற்றம் அடைந்து கொள்ளப்படும் என | உரிய காலத்தில் பணிகளை பூர்த்தி செய்வதற்கு திருத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டும். எனினும் 4 தொகுதிகள் மாத்திரமே 2023 மார்ச் 31 வரை பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. தரவு சேகரிப்பின் குறைந்த முன்னேற்றம் செயற்திட்டக் கிரயம் அதிகரிபதற்கு வழிவகுத்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்பார்க்கப்படுகிறது. | |
| (உ) | மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 544 மில்லியன் பெறுமதியான 10 பெறுகை நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன; மீளாய்வாண்டின் போது ரூபா 479 மில்லியன் பெறுமதியான 8 பெறுகை நடவடிக்கைகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | இணங்கப்பட்டது. ரூபா 65 மில்லியன் தொகையான நடவடிக்கைகள் TCAMP நோக்கெல்லையிலிருந்து நீக்கப்பட்டது. | பெறுகை நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | நான்கு ஆலோசகர்களுக்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 118 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளதுடன் ஆலோசனை பணிகள் 2023 மார்ச் 31 இற்கு முன்னர் பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எனினும், ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள பலவீனங்கள் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அடைந்து கொள்ளப்பட்ட முன்னேற்றம் 25 சதவீதம் முதல் 64 சதவீதம் வரை இருந்தது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் கடன் காலப்பகுதிக்குள் ஆலோசனைப் பணிகளின் மிகுதிப் பணியை அடைந்துகொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. ஆலோசகர்களால் தரவைச் சேகரிப்பதற்கும், இணங்கப்பட்ட அட்டவணையின் பிரகாரம் பணிகளை பூர்த்தி செய்வதற்கும் முடியாதிருந்தது. | சரியான நேரத்தில் பணிகளை பூர்த்தி செய்வதற்கு தீவிர கண்காணிப்பு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 விளைவற்ற/ பயன்படுத்தப்படாத/ குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 60 கலக்சி ரப் ஏ7 புத்தக அட்டைகள் (60 Galaxy Tab A7 book covers) 2022.05.04 இல் ரூபா 498,000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2023 மார்ச் 23 இல் உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு 05 ரப் அட்டைகள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டுள்ளன. | இணங்கப்பட்டது. | வளங்களை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மூலதனச் செலவின வாக்குப்பண இல. 117-2-4-48-2506-0-17 இன் கீழ் ரூபா 17.5 மில்லியன் GOSL ஒதுக்கீட்டில் செயற்திட்டம் ரூபா 13.5 மில்லியனை மாத்திரமே பயன்படுத்தியிருந்ததுடன் 23 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 4 மில்லியன் ஒதுக்கீடு மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக ரூபா 350 மில்லியன் வெளிநாட்டுக் கடனுக்கான ஒதுக்கீட்டில், செயற்திட்டமானது ரூபா 306 மில்லியனை மாத்திரமே பயன்படுத்தியிருந்ததுடன் மொத்த ஒதுக்கீட்டில் 12 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 44 மில்லியன் தொகை செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இணங்கப்பட்டது. | செயற்திட்ட காலப்பகுதியினுள் செயற்திட்ட நிதிகளை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2022 சனவரி 25 இல் RDA பயன்பாட்டிற்காக ரூபா 51.5 மில்லியன் பெறுமதியான ஏரியல் டிரக் வாகனத்தை செயற்திட்டம் கொள்வனவு செய்திருந்தது. எனினும், கொள்வனவு உடன்படிக்கையின் 4.5-4.8 உட்பிரிவுகளுக்கு முரணாக 2022 மார்ச் 31 இல் வாகனம் உதிரிப் பாகங்கள் மற்றும் உப பாகங்கள் இல்லாமல் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2022 மார்ச் 31 இல் ரூபா 39.6 மில்லியன் தொகையான மொத்தக் கிரயத்தில் 80 சதவீதம் வழங்குநருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் உதிரிப் பாகங்கள் மற்றும் உப பாகங்கள் 2023 ஏப்ரல் 30 வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், சில உதிரிப் பாகங்கள் உத்தரவாதக் காலப்பகுதியின் போது முதல் திட்டமிடப்பட்ட பராமரிப்பில் கிடைக்ககூடியதாக இருக்க வேண்டும், எனினும் உதிரிப் பாகங்களைப் பெறாமல் எதிர்காலத்தில் வாகனம் விளைவற்று இருக்கலாம். அத்துடன், ஒப்பந்த நிபந்தனையின் 26 ஆம் உட்பிரிவின் பிரகாரம் வழங்குநர் விநியோகத் திகதிக்குள் ஏதேனும் அல்லது அனைத்து பொருட்களையும் வழங்கத் தவறினால் அல்லது | வாகனம் RDA ஆல் கையேற்கப்பட்டது. தற்போது வழங்குநர் வாகனத்தின் உதிரிப் பாகங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதெனவும் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கு RDA இன் இயந்திரப் பிரிவை கையேற்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யுமாறும் கோரியுள்ளார். | ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் தொடர்புடைய சேவைகளைச் செய்யத் தவறினால் கொள்வனவாளர் ஒப்பந்த விலையிலிருந்து தாமதக் கட்டணங்களாக கழிக்கலாம். ஆனால் இந்த செயற்திட்டம் தாமதக் கட்டணங்களை கழிப்பதற்கு எந்த நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.